செய்தி வெளியீடு எண்:42 நாள் : 22.03.2021

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021**
**மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான கண்காணிப்பு குழுக்கூட்டம்**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்**
**திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

******

தேனி மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதனை உறுதி செய்திடும் பொருட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான கண்காணிப்பு குழுக்கூட்டம் இன்று (22.03.2021) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளான 198. ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி, 199. பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதி, 200. போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி, 201. கம்பம் சட்டமன்ற தொகுதி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தில் நூறு சதவீதம் வாக்குப்பதிவினை பதிவு செய்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் மொத்தம் 23,846 மாற்றுத்திறனாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதில் 18-வயது பூர்த்தியடைந்த 18,655 மாற்றுத்திறனாளிகள், நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏதுவாக, துறை ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில், அனைத்து மாற்றுத்திறனாளிகளும் தங்களது வாக்குப்பதிவினை பதிவு செய்திடும் பொருட்டு, தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்களித்திட ஏதுவாக அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சாய்தள வசதி, சக்கர நாற்காலிகள் வசதி போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டு, இதுதவிர சிறப்பு கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, அவர்களுக்கான தனியாக வாகனம் நிறுவத்துவதற்கென சிறப்பு வாகனம் நிறுத்துமிடம் மற்றும் வழிக்காட்டு பலகை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிட வாக்குச்சாவடி உதவியாளர்கள், குறிப்பாக EVM, VVPAT ஆகியவைகளின் மூலம் பார்வையற்றவர்களுக்கு வாக்களிக்கும் முறை குறித்து பயிற்சி அளித்தல் மற்றும் அவர்களுக்கு பிரத்யேக கைபேசி வசதி போன்ற பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நூறு சதவிகிதம் வாக்களித்திட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட செயல்முறைகளை முறையாக கண்காணித்து, தங்களது பணிகளை சிறப்பாக மேற்கொண்டு, 18-வயது பூர்த்தியடைந்த மாற்றுத்திறனாளிகள் அனைவரும் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் வாக்களித்திட துறை ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், மாற்றுத்திறனாளிகளுக்கென தேர்தல் ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை மாற்றுத்திறனாளிகள் கருத்தில் கொண்டு, தங்களின் வாக்குகளை தவறாமல் பதிவு செய்து, ஜனநாயக கடமையினை நிறைவேற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்பட்டு, இக்கூட்டத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளிடம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டு, துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் க.சகுந்தலா, துறை அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**